அ.வ.எண்: 230/2014 நாள்:28.07.2022

**வா. சா.1.திருமதி.ஜீலியட்**

**2 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

1) தாவா சொத்தின் அடிமனை கோவிலுக்கு சொந்தமானது என்றால் சரிதான் மேற்படி கோவிலை தரப்பினராக சேர்த்துள்ளோமா என்றால் இல்லை. ஞானதுரையிடம் உள்வாடகைக்கு வாடகைதாரராக இருப்பதாக சொல்லிதான் இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். எனது கணவர் இறப்புக்கு பின்பும் கணவர் எந்த உரிமையின் அடிப்படையில் தாவா சொத்தை அனுபவித்து வந்தாரோ அந்த உரிமையின் அடிப்படையில் தான் தாவா சொத்தை நான் அனுபவத்து வருகிறேன் என்றால் சரிதான். எனது கணவர் ஞானதுரையிடம் உள்வாடகை தாராக இருந்து வந்தார் அதோ போல் தான் நானும் உள்வாடகை தாரராக இருந்து வருகிறேன் என்றால் சரிதான். 2 ஆம் பிரதிவாதியை நான் இந்த வழக்கில் சேர்க்காமல் முதல் பிரதிவாதியை சரிகட்டி வீட்டு வரியை என்னுடைய பெயரில் மாற்றுவற்காக பரிகாரம் கோரி பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. ஞானதுரை பதிவான செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் 2 ஆம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த தாவா சொத்தானது மேற்படி 2 ஆம் பிரதிவாதிக்கு உரிமையானது என்பதை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

P CHANDRASEKAR

sgs12345
Digitally signed by P CHANDRASEKAR
Date: 2022.07.28 23:22:56 +0530